**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – பெரம்பலூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான இளநிலை வரைதொழில் அலுவலர் திருமதி.அ.சுஜாதா என்பவரின் வாரிசுதாரர் / மகள் செல்வி.பெ.கிருத்திகா இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை**

**அரசாணை (4ப) எண்.12** **நாள்:10.03.2022**

**பிலவ, மாசி 26,**

**திருவள்ளுவர் ஆண்டு–2053**

**படிக்கப்பட்டவை:**

1. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.1775/2020/பஅ2, நாள்:27.11.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.45318/2021/டி2, நாள்:07.12.2021 மற்றும் 02.02.2022.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இளநிலை வரைதொழில் அலுவலராகப் பணிபுரிந்து 18.05.2020 அன்று பணியிடைக்காலமான திருமதி.அ.சுஜாதா என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.பெ.கிருத்திகா என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், பெரம்பலூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 27.11.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண்பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.பெ.கிருத்திகா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 19.06.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 19.06.1994 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 25 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 26 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 26 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.பெ.கிருத்திகா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 27.11.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 24.02.2022 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.3257/ட்டி.1/2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.6962/ஜி3/2022, நாள்:03.03.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -9/18.

கருவூல மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், பெரம்பலூர் மாவட்டம்.

**நகல்:**

செல்வி.பெ.கிருத்திகா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, பெரம்பலூர் மாவட்டம்.
(**வழி**:மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ட்டி.1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி3) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.